**Sub Court, Eraniel**

**O.S. No.** 40/2018
**Date**: 30.06.2025.
வா.சா.1 - திருமதி. மேரி செலின்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். வழக்கு விபரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். நான் பிறந்து வளர்ந்தது குளச்சல் கிராமம், சேவிளை, பாலபள்ளம் அஞ்சல். எனக்கு 4 சகோதரர்கள் மற்றும் 3 சகோதரிகள். நாங்கள் 8 பேரும் குளச்சல் கிராமத்தில் தான் பிறந்து வளர்ந்தோம். எங்களுக்குள் கருத்து வேற்றுமை ஒன்றும் கிடையாது. வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண்.9445, 9446 புதிய சர்வே எண்.322/13. பட்டா எண்.342. 342 பட்டாஎண் இல்லை என்றாலும், பட்டிகை சொத்தின் விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்றாலும், சரியல்ல. பட்டா பற்றி விபரங்கள் வழக்கு பட்டிகையில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து முதலில் குளச்சல் கிராமம், தற்போது ரீத்தாபுரம் கிராமம். 1ம் பிரதிவாதி ஜெயசேகரன் ரீத்தாபுரத்தில் வசித்து வருகிறார் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி அவர் என் உறவினர். அவருக்கு என் குடும்பத்தினை பற்றிய விபரங்கள் தெரியும் என்றால், சரிதான். பொதுவாக அரசு சார்பதிவாளர் அலுவலகத்தில் அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பிறகுதான் அதற்கு தேவையான ஆவணங்களின் அடிப்படையில் பத்திர பதிவு செய்வது வழக்கம் என்றால், சரிதான். கேரளா மாநிலம் பாறசாலையிலும் இவ்வாறுதான் பதிவு செய்வார்கள் என்றால்,

சரிதான். முன்னால் அப்படி கிடையாது, ஆவணங்கள் இல்லாவிட்டாலும் பதிவு செய்வார்கள். எனக்கு அவ்வாறு ஆவணங்கள் இல்லாமல் பதிவு செய்யவில்லை. எனக்கு பதிவு செய்ததுபோல தான் மற்ற ஆவணங்களையும் முறையாக பதிவு செய்வார்கள் என்றால், அப்போதுள்ள சட்டத்தின்படி பதிவு செய்வார்கள் என்று சாட்சி கூறுகிறார். வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் 60 சென்ட், அதில் 6 சென்டு. வழக்கு சொத்திற்கு வழிபாதை உண்டு. வழிபாதை சர்வே எண்.322/13. வழக்கு சொத்தின் தெற்கு பக்கம், தாம்சன் சொத்து. பின்னிட்டு சாட்சி அஸ்வினி குமாரி ஜெயசேகரனுக்கு எழுதிக்கொடுத்தது. அஸ்வினி குமாரியின் சொத்து தெற்கு பக்கம் உள்ளது என்றால், சாட்சி நீண்டநேரம் யோசித்து பதில் ஏதும் கூறவில்லை. தெற்கு பக்கம் அஸ்வினி குமாரி சொத்து என்றாலும், அவர் தான் வழக்கு பட்டிகை சொத்தினை 1ம் பிரதிவாதி ஜெயசகேருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால், சரியல்ல. எனது சகோதரன்ஜோசப் சிறில் போலியாக அஸ்வினி குமாரிக்கு எனது சொத்தை எழுதிக்கொடுத்தார். கிழக்கு பக்கம் உள்ள சொத்து ஜோசப் சிறில் சொத்து என்று வழக்கு பட்டிகை யில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், ஜோசப் சிறில் சொத்து என்று பொய்யாக குறிப்பிடுகிறார். எனது சகோதரர் ஜோசப் சிறில் 25.09.2017 ல் இறந்துவிட்டார், அவர் இறந்த பிறகு அந்த நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். வழக்கு சொத்தை பற்றி விபரங்கள் ஜோசப் சிறிலுக்கு தெரியும் என்பதால் தான் அவர் மறைவிற்கு பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. அவர் உயிருடன் இருக்கும்போதேஅ.வ.எண்.143/2013 பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு

நிலுவையில் இருக்கும்போதே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். இரண்டு வழக்குகளிலும் பட்டிகை சொத்து ஒரே சர்வே எண் சம்பந்தப்பட்டது தான். அ.வ.எண்.143/2013 வழக்கு தள்ளுபடியாகிவிட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.